யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 06
First Term Examination – 2020 – Grade 06

புவியியல்	61	T	I, II	இரண்டு மணித்தியாலம் Two Hours

சுட்டெண் Index No

புவியியல்

பகுதி - I

1 - 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க

01. சமூகத்தின் மிக முக்கியமான செல்வங்களாக எதனை கருதுகின்றனர்?
1. முதியவர்கள் 2. குழந்தைகள் 3. மாணவர்கள் 4. இளைஞர்கள்

02. குழந்தைகளுக்கு முறையான கல்வியை பெற்றுக் கொடுக்கும் நிறுவனம் எது?
1. பாடசாலைகள் 2. முன்பள்ளிகள்
3. தனியார் கல்வி நிலையங்கள் 4. பல்கலைக்கழகங்கள்

03. இலங்கையில் அதிகளவு மாவட்டம் காணப்படும் மாகாணம் எது?
1. கிழக்கு மாகாணம் 2. தெற்கு மாகாணம் 3. மேற்கு மாகாணம் 4. வடக்கு மாகாணம்

04. இலங்கையிலுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை
1. 25 2. 24 3. 09 4. 22

05. திசையின் அமைவிடத்தை அறிந்து கொள்வதற்கு முதலில் எந்த திசையை அறிய வேண்டும்
1. வடக்கு 2. தெற்கு 3 . மேற்கு 4. கிழக்கு

06. வடக்கு திசைக்கும் கிழக்கு திசைக்கும் இடையே எத்திசை காணப்படுகின்றது
1. தென் கிழக்கு 2. தென்மேற்கு 3. வடகிழக்கு 4. வடமேற்கு

07. வானிலை மூலகங்களில் பிரதானமானது எது?
1. மழைவீழ்ச்சி 2. வெப்பநிலை 3. காற்று 4. ஈரப்பதன்

08. இலங்கையில் வளி மண்டலத்திணைக்களம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது.
1. காலி 2. யாழ்ப்பாணம் 3. கண்டி 4. கொழும்பு

09. வெப்பநிலை அளக்கப்பயன்படுத்தும் கருவியையும் அளவையும் காட்டும் விடை
1. வெப்பமானி, செல்சியஸ் 2. வெப்பநிலை, பரனைற்
3. மழைமானி, செல்சியஸ் 4. வெப்பமானி, மில்லிமீற்றர்

www.lkedu.lk

10. 

இக்கருவியை எவ்வாறு அழைப்பர்

1. மழைமானி
2. வெப்பமானி
3. காற்றுவிசைமானி
4. காற்று திசைகாட்டி

11. இயற்கை அனர்த்தம் அல்லாத ஒன்று
    1. சூறாவளி 2. சுனாமி 3. வாகன நெரிசல் 4. மண்சரிவு

12. உமது பாடசாலை எச்சூழலில் அமைந்துள்ளது
    1. கிராமச்சூழல் 2. உயர்நிலச்சூழல் 3. நகரச்சூழல் 4. கரையோரச்சூழல்

13. வானிலை அறிக்கையினால் அதிகளவு நன்மை அடைபவர்கள்
    1. வைத்தியர்கள் 2. மாணவர்கள் 3. மீனவர்கள் 4. தொழிலாளர்கள்

14. கரையோரப்பிரதேசத்தை பெரிதும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இயற்கை அனர்த்தம் எது
    1. மண்சரிசு 2. சுனாமி 3. வெள்ளப்பெருக்கு 4. சூறாவளி

15. கொரோனா வைரசினால் பெரிதும் பாதித்துக் கொண்டிருக்கும் நாடு எது?
    1. இங்கிலாந்து 2. ஐக்கிய அமெரிக்கா3. இத்தாலி 4. சீனா

16. பலவகையான கழிவுப் பொருட்களை உக்கச் செய்வதற்கு உதவுவது
    1. கறையான் 2. மண்புழு 3. செண்பகம் 4. காகம்

17. பிளேக் நோயை பரப்புவது எது?
    1. யானை 2. எலி 3. பாம்பு 4. பூனை

18. இடம் பெயர் பறவையாகக் காணப்படுவது
    1. காகம் 2. சிட்டுக்குருவி 3. கிளி 4. மைனா

19. உமது பாடசாலையின் அருகில் காணப்படும் பொது நிறுவனங்களில் சட்டத்தையம் நீதியையும் நிலை நாட்டும் நிறுவனம் எது?
    1. நகராட்சி மன்றம் 2. பொலிஸ் நிலையம் 3. நீதி மன்றம் 4. இராணுவ முகாம்

20. பின்வரும் **நிரல் I**யும் **நிரல் II**யும் பொருத்தமான முறையில் தொடர்பு படுத்தி சரியான விடையை தெரிவு செய்க

நிரல் I	**நிரல் II**
1. மண்ணை வளப்படுத்த உதவுவது	A . தவளை
2. சூழலை அழகு படுத்துவது	B - நுளம்பு
3. வானிலை எதிர்வு கூறுவது	C - மண்புழு
4. மலேரியா, டெங்கு நோயைப்பரப்புவது	D - கிளி


1. CABD 2. CDAB 3. BCAD 4. DCBA

www.ikeu.lk

பகுதி - II

முதலாம் வினா கட்டாயமானது.
முதலாம் வினா உட்பட 05 வினாக்களுக்கு விடை தருக.

01. (1) கீழே தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தில் A தொடக்கம் L வரை காட்டப்பட்டுள்ள மாவட்டங்களை இனங்கண்டு ஒழுங்காக எழுதுக



1. காலி - ( )
2. கண்டி - ( )
3. யாழ்ப்பாணம் - ( )
4. மட்டக்களப்பு - ( )
5. பொலநறுவை - ( )
6. அம்பாறை - ( )
7. மாத்தளை - ( )
8. கொழும்பு - ( )
9. கம்பகா - ( )
10. புத்தளம் - ( )
11. கிளிநொச்சி - ( )
12. திருகோணமலை - ( )

(2) 1. A - வடக்கு மாகாணத்தில் கரையோரச்சூழல் இல்லாத மாவட்டம் எது?
B - வடக்கு மாகாணத்தில் அதிகளவான கரையோரத்தை கொண்ட மாவட்டம் எது?

2. பின்வரும் மாகாணங்களில் காணப்படும் மாவட்டம் இவ்விரண்டு தருக?
1. கிழக்கு மாகாணம்
2. மேற்கு மாகாணம்

(3) உமது பாடசாலை அமைந்துள்ள நிர்வாக அலகுகளை சரியாக எழுதுக.
A - கிராம சேவகர் பிரிவு
B - பிரதேச செயலர் பிரிவு
C - மாவட்டம்
D - மாகாணம்

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

02. 1. A - உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மாவட்டம்?
B - இலங்கையில் மிகப் பெரிய மாகாணம் எது?
2. இலங்கையில் மூன்று மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் நான்கு தருக?
3. உமது பாடசாலையில் அமைந்துள்ள ஞாபகார்த்த மண்டபங்கள் நான்கு தருக?

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

03. 1. A - திசையை சரியாக அறிந்து கொள்ள உதவும் கருவி?
B - திசையை அறிய கருவி இல்லாத சந்தர்ப்பத்தில் திசையை எவ்வாறு அறிய முடியும்?
2. திசைகள் எட்டினையும் வரைபடம் மூலம் காட்டுக?
3. உமது பாடசாலைக்கு அருகில் காணப்படும் பொது நிறுவனங்கள் நான்கு தருக?

www.ked.lk

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

04. 1. A - அதிக வேகமாக வீசும் காற்றை எவ்வாறு அழைப்பர்?
B - காற்றின் வேகம் எவ்வாறு அளவீடு செய்யப்படும்
2. வானிலை மூலகங்கள் நான்கு தருக?
3. இலங்கையில் காணப்படும் வானிலையின் தன்மைகள் நான்கு தருக?

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

05. 1. A - இயற்கை அனர்த்தம் இரண்டு தருக?
B - வானிலை தகவல்களை அறிந்து கொள்வதால் நன்மையடையும் இரு பிரிவினர்?
2. உமது பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றிய இல்லங்களின் பெயர்கள்?
3. பின்வரும் கருவிகள் மூலம் அறவிடப்படும் வானிலை மூலகங்களை தருக?
A - வெப்பமானி
B - மழைமானி
C - காற்று விசைமாணி
D - காற்று திசைகாட்டி

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

06. 1. A - வீட்டின் அயற்சூழலில் பல்வகைமையை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துவன இரண்டு தருக?
B - இடம்பெயர் பறவைகள் இரண்டு தருக?
2. தாவரங்களினால் கிடைக்கும் பயன்கள் நான்கு தருக?
3. இலங்கையில் பல்வேறு வகையான சூழலில் வீடுகள் அமைந்துள்ளன. அவற்றில் நான்கு தருக?

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

www.lkedu.lk